சட்டமன்றத் தொகுதியில் அவர் குறிப்பிடுகின்ற அந்த ஒன்றியத்தில் மட்டும் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அம்மா அவர்களுடைய கடந்த 7 ஆண்டுகால ஆட்சியில் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. வருங்காலத்தில் அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உரிய ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

தனி மாவட்டம்

***7281—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியை மையமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியை மையமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்குவது குறித்து ஆய்வு செய்து, அரசு விதிகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் புதிய மாவட்டம் உருவாக்க உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்படும் என்றும் மேலும், புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் வணங்குகின்றேன். சேலம் மாவட்டத்தில் 11 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ அல்லது வேறு அலுவலகங்களுக்கோ செல்வதற்கு, கெங்கவல்லி தொகுதியில் உள்ள பச்சைமலை கிராமத்திலிருந்து 3 பஸ் பிடித்து, 4 மணி நேரம் பயணம் செய்து, சுமார் 200 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அருகில் இருக்கக்கூடிய ஆத்தூர் தொகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அறிவித்தால், கெங்கவல்லி தொகுதி மக்கள், ஏற்காடு தொகுதி மக்கள், ஆத்தூர் தொகுதி மக்கள் என சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள். மூன்று தொகுதிகளும் தனித் தொகுதிகளாக இருக்கின்றன. ஆகவே, தனி மாவட்டமாக அறிவித்தால் அந்தப் பகுதிவாழ் மக்கள் அனைவரும் பயன்பெறுவார்கள். எனவே, ஆத்தூர் தனி மாவட்டமாக அறிவிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் 13 வட்டங்களைக் கொண்ட மிகப் பெரிய மாவட்டமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. நிருவாக நலன் கருதி, ஆத்தூர் நகரத்தினை தலைமையிடமாகக்கொண்டு சேலம் மாவட்டத்திலிருந்து ஆத்தூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து சின்னசேலம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய வருவாய் வட்டங்களை ஒருங்கிணைத்து ஆத்தூர் மாவட்டம் என்ற புதிய மாவட்டத்தை உருவாக்கினால் அப்பகுதியிலுள்ள பொது மக்களின் நலன் காக்கப்படும் என்கிற

கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். இருப்பினும், அரசு விதிகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் புதிய மாவட்டம் உருவாக்க உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும். ஒரு புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவு என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்ற நல்ல செய்தியைச் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொங்கலுக்கு எல்லோரும் இனிப்பாக கரும்பைச் சாப்பிடுவார்கள். பொங்கல் பரிசு ரூ.100/– என்று கொடுக்கப்பட்டு வந்ததை 10 மடங்கு அதிகப்படுத்தி ரூ.1,000/– என வழங்க உத்தரவிட்ட தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கருமந்துறை, வடக்குநாடு, தெற்குநாடு, கீழ்நாடு, மேல்நாடு, தும்பல், நெய்யமலை உள்ளிட்ட மலைக்கிராமங்கள் அடங்கிய பகுதிகள் முற்றிலும் மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதிகளாக இருக்கின்றன. இந்தப் பகுதிகளை உள்ளடக்கி ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் தாலுகாவைப் பிரித்து, புதிய தாலுகா அமைத்துத் தர தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய மாவட்டத்தில் தொடங்கி, தற்போது புதிய வட்டம் உருவாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொதுவாக புதிய வருவாய் கோட்டம் மற்றும் வட்டம் உருவாக்கிட அதற்கான அளவுகோல்கள் அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வருமேயானால், முன்னுரிமை

2019 ஜனவரி 7]

அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

சமுதாயக் கூடம்

***12060—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், கூடுவெளிச்சாவடியில் ஆதி திராவிடர் நலத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

எனக்கு தாயாய், தந்தையாய், ஆசானாய், தெய்வமாய் விளங்கிய தாயின் திருவடியை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில் கூடுவெளிச்சாவடியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை